

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (27.2.2025) தலைமைச் செயலகத்தில், டெல்டா மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதையொட்டி கொள்முதல் நிலையங்களில் உள்ள நெல்மூட்டைகளை பாதுகாப்பது குறித்து தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், மயிலாடுதுறை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் எம்.சாய்குமார், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) சா.விஜயராஜ்குமார், பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையர் சிஜி தாமஸ் வைத்யன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சிறப்புச் செயலாளர் எஸ்.கணேஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (27.2.2025) முகாம் அலுவலகத்தில், கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சந்தித்து, 16.3.2025 அன்று நடைபெறவுள்ள கவிப்பேரரசு வைரமுத்து படைப்பிலக்கியம் குறித்த பன்னாட்டு கருத்தரங்கமான ”வைரமுத்தியம் விழாவில் கலந்துகொண்டு நிறைவு உரையாற்ற அழைப்பு விடுத்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (27.2.2025) முகாம் அலுவலகத்தில், முரசொலி புகைப்பட நிபுணர் ஜி.மனோகரன், அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகள் டாக்டர் எம். சகானா – டாக்டர் வி.கேசவராஜ் ஆகிய புதுமணத் தம்பதியருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (27.2.2025) தலைமைச் செயலகத்தில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றார்.


